TNTS090007742020

மாண்பமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்.

**முன்னிலை : திரு.M. மாரி, M.S.W., L.L.B.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16– ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**C.C.No.349/2021**

அரசுக்காக: உதவி காவல் ஆய்வாளர்,
சங்கரன்கோவில் டவுண் காவல் நிலையம்
(சங்கரன்கோவில் டவுண் காவல் நிலைய குற்ற எண்.564/2020)

……… குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

1. பாலகிருஷ்ணன், வயது, 19/2020
த/பெ. மாரியப்பன்,
72/2, இரயில்வே பீடர் ரோடு, முல்லைநகர், சங்கரன்கோவில்.
2. மாரியப்பன், வயது, 48/2020,
த/பெ. பரமசிவன்,
72/2, இரயில்வே பீடர் ரோடு, முல்லைநகர், சங்கரன்கோவில்.
3. பாக்கியலெட்சுமி, வயது, 45/2020,
க/பெ. மாரியப்பன்,
72/2, இரயில்வே பீடர் ரோடு, முல்லைநகர், சங்கரன்கோவில்.

……. எதிரிகள்

| | | |
|---|---|---|
| **1.** | Case Number | CC No. 349/2021 |
| **2.** | Name of the Police Station and Crime Number | Sankarankovil Town Police Station<br>Crime No.564/2020 |
| **3.** | Name of the Accused | 1. Balakrishnan<br>2. Mariappan<br>3. Backiyalakshmi |
| **4.** | Date of Occurrence | 03.09.2020 |
| **5.** | Date of surrender | -- |
| **6.** | Date of Arrest | A1 to A3 – 04.09.2020 |

| | | |
|---|---|---|
| **7.** | Period of remand | -- |
| **8.** | Date of release on bail | A1 to A3 – 04.09.2020 (Station bail) |
| **9.** | Date of filing final report | 16.08.2021 |
| **10.** | Date of Commencement of trial | 04.06.2026 |
| **11.** | Date of Chief examination | PW1 04.06.2026<br>PW2 04.06.2026<br>PW3 04.06.2026<br>PW4 04.06.2026 |
| **12.** | Date of Cross examination | PW1 04.06.2026<br>PW2 04.06.2026<br>PW3 04.06.2026<br>PW4 04.06.2026 |
| **13.** | Date of Conclusion of trial | 08.06.2026 |
| **14.** | Plea of the accused | Not guilty |
| **15.** | Finding of the Court | The A1 is found not guilty for the offences u/s.294(b) (3 counts), 323, 506(1) (3 counts) of IPC and Section 4 of TNPHW Act and the 2nd accused is found not guilty for the offences u/s.294(b) (3 counts), 324, 506(1)(3 counts) of IPC and Section 4 of TNPHW Act and 3rd accused is found not guilty for the offences u/s.294(b) (3 counts), 323, 506(1) (3 counts) of IPC and therefore the accused is acquitted under Section 248(1) Cr.P.C. |

கடந்த 16.08.2021 தேதியன்று இந்நீதிமன்றத்தின் ஆண்டுப்பட்டிகை எண். 349/2021 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி பொது வழக்கறிஞர் நிலை –1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ராம்குமார், M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும் இவ்வழக்கானது 16.06.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வரப்பெற்று ஆவணங்களை பரிசீலனை செய்து, இந்நீதிமன்றம் வழங்கும் ...

## தீர்ப்புரை

இவ்வழக்கானது சங்கரன்கோவில் டவுன் காவல் நிலையத்தார் 1–வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2–வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 3–வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(1)–ன் கீழும் குற்ற எண். 564/2020–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள கு.வி.மு.ச. பிரிவு 173(2)–ன் கீழ் இறுதி அறிக்கையை நீதிமன்றம் கவனமுடன் பரிசீலனை செய்து போதுமான காரணம் எதிரிகள் மீது குற்றம் விசாரிக்கத்தக்க முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் திருப்தி அடைந்து பின் கு.வி.மு.ச. பிரிவு 190 (1) (b)–ன் கீழ் இவ்வழக்கு நீதிமன்றம் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

### 1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :

1.1 இவ்வழக்கின் புகார்தாரரும், 2–வது எதிரியும் உடன்பிறந்த அண்ணன், தம்பி என்றும், இருவருக்கும் ஒரே இடத்தில் உள்ள வீட்டை புகார்தாரருக்கு வடபாகமாகவும், 2–வது எதிரிக்கு தென்பாகமாகவும் அவரது பெற்றோர்கள் பிரித்து கொடுத்துள்ளார்கள். புகார்தாரரும், 2–வது எதிரியும் தனித்தனியாக வீட்டை பிரித்து குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்குள் வழிபாதை சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு முன்விரோதம் இருந்துள்ளது. இதன் காரணமாக கடந்த 03.09.2020–ம் தேதி 19.00 (07.00) மணிக்கு புகார்தாரர் குடியிருக்கும் வீட்டின் மாடிக்கு செல்லும் படிக்கட்டில் 1–வது எதிரி ஏறி மேலும், கீழும் இறங்கிக் கொண்டிருந்துள்ளார் என்றும், புகார்தாரர் 1–வது எதிரியிடம் ஏன் அனாவசியமாக படியில் ஏறி, இறங்கிக் கொண்டிருக்கிறாய் என்று கேட்டதற்கு அங்கு நின்ற 1–வது எதிரி அதைக் கேட்க நீ யாரு என்று கேட்டு வாக்குவாதம் செய்துள்ளார். அப்போது அங்கு வந்த 2, 3 எதிரிகள் மூன்று பேர்களும் சேர்ந்து புகார்தாரரையும், சாட்சி–2 ஐயும் பார்த்து வீட்டுமாடி செல்லும் படிக்கட்டில் வைத்து "தேவிடியா மக்களா" என்று அசிங்கமாக பேசியும், சாட்சி–3 ஐயும் பார்த்து பெண் என்றும் பாராமல் தேவிடியா மக்களா என்று அசிங்கமாக பேசியும், 1–வது எதிரி கட்டையால் மாறி மாறி சாட்சி–2 சுப்பிரமணியனை தாக்கியதில் வலது பக்க கன்னத்திலும், இடது கை மணிக்கட்டிலும், வலதுகால் முட்டிலும் சாதாரண காயம்

ஏற்படுத்தியும், புகார்தாரரை 2–வது எதிரி அரிவாளால் தாக்கியபோது அதை தடுத்ததில் அவருக்கு இடது கை மணிக்கட்டில் சாதாரண காயம் ஏற்படுத்தியும், சாட்சி–3 ஐ 3–வது எதிரி கட்டையால் தாக்கியதில் அவருக்கு வலதுபக்க தோள்பட்டையில் சாதாரண காயம் ஏற்படுத்தியும், எதிரிகள் மூன்று பேரும் சேர்ந்து புகார்தாரர் மற்றும் சாட்சி–2, சாட்சி–3 ஆகியோர்களைப் பார்த்து "எங்களை படிக்கட்டு மேல் ஏறி போகாதே என்று சொன்னால் உங்களை ஒரு வழி பண்ணாமல் விடமாட்டோம்" என்று கொலை மிரட்டல் விடுத்தும், மேற்படியாரின் பெண்மைக்கு பங்கம் விளைவித்ததாக தெரிவிக்கப்பட்டு, 1–வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2–வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 3–வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(1)–ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சங்கரன்கோவில் டவுன் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் வழங்கி, குற்றம் குறித்து வினவிய விபரம் ;–</u>

2.1 இவ்வழக்கின் எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு 204–ன்படி அழைப்பணை அனுப்பி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207–ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசம் அளித்து, இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்தவகையில் கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் கீழ் எதிரிகள் மீது கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டன.

1) இவ்வழக்கின் புகார்தாரரும், 2–வது எதிரியும் உடன்பிறந்த அண்ணன், தம்பி என்றும், இருவருக்கும் ஒரே இடத்தில் உள்ள வீட்டை புகார்தாரருக்கு வடபாகமாகவும், 2–வது எதிரிக்கு தென்பாகமாகவும் அவரது பெற்றோர்கள் பிரித்து கொடுத்துள்ளார்கள். புகார்தாரரும், 2–வது எதிரியும் தனித்தனியாக வீட்டை பிரித்து குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்குள் வழிபாதை சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு முன்விரோதம் இருந்துள்ளது. இதன் காரணமாக கடந்த 03.09.2020–ம் தேதி 19.00 (07.00) மணிக்கு புகார்தாரர் குடியிருக்கும் வீட்டின் மாடிக்கு செல்லும் படிக்கட்டில் 1–வது எதிரி ஏறி மேலும், கீழும் இறங்கிக் கொண்டிருந்துள்ளார் என்றும், புகார்தாரர்

1–வது எதிரியிடம் ஏன் அனாவசியமாக படியில் ஏறி, இறங்கிக் கொண்டிருக்கிறாய் என்று கேட்டதற்கு அங்கு நின்ற 1–வது எதிரி அதைக் கேட்க நீ யாரு என்று கேட்டு வாக்குவாதம் செய்துள்ளார். அப்போது அங்கு வந்த 2, 3 எதிரிகள் மூன்று பேர்களும் சேர்ந்து புகார்தாரரையும், சாட்சி–2 ஐயும் பார்த்து வீட்டின் மாடிக்கு செல்லும் படிக்கட்டில் வைத்து "தேவிடியா மக்களா" என்று அசிங்கமாக பேசியும், சாட்சி–3 ஐயும் பார்த்து பெண் என்றும் பாராமல் தேவிடியா மக்களா என்று அசிங்கமாக ஏசிய குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 294(பி) (3 எண்ணிக்கைகள்)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

2) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1–வது எதிரி கட்டையால் மாறி மாறி சாட்சி–2 சுப்பிரமணியனை தாக்கியதில் வலது பக்க கன்னத்திலும், இடது கை மணிக்கட்டிலும், வலதுகால் முட்டிலும் சாதாரண காயம் ஏற்படுத்தியும், 3–வது எதிரி கட்டையால் சாட்சி–3 ஐ தாக்கியதில் அவருக்கு வலதுபக்க தோள்பட்டையில் சாதாரண காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக 1, 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 323–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

3) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, 2–வது எதிரி புகார்தாரரை 2–வது எதிரி அரிவாளால் தாக்கியபோது அதை தடுத்ததில் அவருக்கு இடது கை மணிக்கட்டில் சாதாரண காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக 2–வது எதிரி மீது இ.த.ச. பிரிவு 324–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

4) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, எதிரிகள் மூன்று பேரும் சேர்ந்து புகார்தாரர் மற்றும் சாட்சி–2, சாட்சி–3 ஆகியோர்களைப் பார்த்து "எங்களை படிக்கட்டு மேல் ஏறி போகாதே என்று சொன்னால் உங்களை ஒரு வழி பண்ணாமல் விடமாட்டோம்" என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 506(1)(3 எண்ணிக்கைகள்)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன

5) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1, 2 எதிரிகள் 3–வது சாட்சி பழனியம்மாள் என்பவரை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி, அடித்து காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்து, அவரது பெண்மைக்கு பங்கம் விளைவித்த குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் மீது பிரிவு 4 தமிழ்நாடு

பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

3. மேற்படி வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிரிகளுக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்கிறீர்களா ? அல்லது விசாரணையை வேண்டுகிறீர்களா? என்று வினவப்பட்டது. அப்போது எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்.

4. இவ்வழக்கில் சாட்சி விசாரணை தொடங்குவதற்கு முன்பு எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 320 (2)ன் கீழ் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.

5. இதற்குப்பின் அரசு தரப்பில் சாட்சிகளை ஆஜர்படுத்த உத்தரவிடப்பட்டது. அதனடிப்படையில், அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

6. அரசு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின், அவர்களது சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிரான சங்கதிகள் பற்றி நேரடியாக விளக்கம் பெறுவதற்காக கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன் கீழ் கேள்விகள் கேட்டபோது எதிரி பொய் என்று மறுத்தார்.

## 7. <u>**தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் :–**</u>

1) எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளனரா?

2) எதிரிகள் குற்றவாளிகள் எனில், எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?

**8. <u>நிரூபண சுமை :–</u>**

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101–ன் படி(BSA– 104) அரசு தரப்பில்தான் எதிரிகள் குற்றத்தை செய்தார்கள் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க வேண்டிய சுமையானது (Burden of proof) அரசு தரப்பை சார்ந்ததாகும்.

9. **<u>அரசு தரப்பு சாட்சியங்களும், பரிசீலனையும் :–</u>**

9.1 இந்த வழக்கில் எதிரிகள் மீது இது முதலாவது குற்றச்சாட்டு என்பதும், இவ்வழக்கின் புகார்தாரரும், 2–வது எதிரியும் உடன்பிறந்த அண்ணன், தம்பி என்றும், இருவருக்கும் ஒரே இடத்தில் உள்ள வீட்டை புகார்தாரருக்கு வடபாகமாகவும், 2–வது

எதிரிக்கு தென்பாகமாகவும் அவரது பெற்றோர்கள் பிரித்து கொடுத்துள்ளார்கள். புகார்தாரரும், 2–வது எதிரியும் தனித்தனியாக வீட்டை பிரித்து குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்குள் வழிபாதை சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு முன்விரோதம் இருந்துள்ளது. இதன் காரணமாக கடந்த 03.09.2020–ம் தேதி 19.00 மணிக்கு புகார்தாரர் குடியிருக்கும் வீட்டின் மாடிக்கு செல்லும் படிக்கட்டில் 1–வது எதிரி ஏறி மேலும், கீழும் இறங்கிக் கொண்டிருந்துள்ளார் என்றும், புகார்தாரர் 1–வது எதிரியிடம் ஏன் அனாவசியமாக படியில் ஏறி, இறங்கிக் கொண்டிருக்கிறாய் என்று கேட்டதற்கு அங்கு நின்ற 1–வது எதிரி அதைக் கேட்க நீ யாரு என்று கேட்டு வாக்குவாதம் செய்துள்ளார். அப்போது அங்கு வந்த 2, 3 எதிரிகள் மூன்று பேர்களும் சேர்ந்து புகார்தாரரையும், சாட்சி–2 ஐயும் பார்த்து வீட்டின் மாடிக்கு செல்லும் படிக்கட்டில் வைத்து "தேவிடியா மக்களா" என்று அசிங்கமாக பேசியும், சாட்சி–3 ஐயும் பார்த்து பெண் என்றும் பாராமல் தேவிடியா மக்களா என்று அசிங்கமாக ஏசிய குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 294(b) (3 எண்ணிக்கைகள்)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

9.2 மேற்படி முதல் குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

<u>பிரிவு 294:– ஆபாசச் செயல்களும் பாடல்களும் :– மற்றவர்களுக்குத் தொந்தரவாக இருக்கும்படி</u> –

அ) பொதுவிடம் எதிலும் ஆபாசச் செயல் எதையும் செய்கிற, அல்லது

ஆ) பொதுவிடம் எதிலும் அல்லது அதற்கு அருகில், ஆபாசப் பாடல்கள், கதைப்பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற, அல்லது மொழிகிற எவரும் – மூன்று மாதங்கள் வரை சிறைத்தண்டனையோ, அல்லது ஓராயிரம் ரூபாய் வரை அபராதமோ, அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

9.3 சம்பவ இடமானது முல்லை நகர், சங்கரன்கோவிலில் குடியிருக்கும் அ.சா.1ன் வீட்டின் மாடிக்கு செல்லும் படிக்கட்டு ஆகும். இதனை அ.சா.1 சாட்சி மூலம் அறியலாம். மேற்படி பிரிவு 294(b) உட்கூறுகள் பொருந்தவேண்டும் எனில், சம்பவ

இடமானது பொது இடமோ அல்லது பொது இடம் அருகில் ஏற்பட்டிருக்க வேண்டும் என கூறப்பட்டதிலிருந்தே இந்த அரசு தரப்பு வழக்கில் அதுபோன்று அ.சா.1 சாட்சி சம்பவ இடம் பொது இடம் என்றோ, பொது இடம் அருகில் என்றோ குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. குறிப்பாக, அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ.1 என்றும், புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் தனக்குத் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அதேபோன்று, சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், " ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 தனது அப்பா என்றும், எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதகாவும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். மேலும், சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், " ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 தனது கணவர் என்றும், எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதகாவும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களிலிருந்து 1 முதல் 3 எதிரிகள்தான் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களை பொது இடத்தில் வைத்து அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாகவும், அதனால், அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களுக்கு தொந்தரவு ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. இந்த வழக்கில் சம்பவ இடமானது தனிமனித நபருக்கு பாத்தியப்பட்ட இடம் என்றும், அதன் அருகில் பொது இடம் எதுவும் இல்லை என்பதை பார்வை மகஜர் (அ.சா.ஆ.4), மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) மூலம் அறியலாம். மேலும், மாறாக அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக

மாறியுள்ளார்கள். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)–ன் கீழான குற்றச்சாட்டில் எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டுமெனில், பாதிக்கப்பட்ட நபரை பொது மக்கள் மத்தியிலோ, பொது இடத்திலோ, பொது இடம் அருகிலோ பாதிக்கப்பட்டவரை அவமானப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் ஆபாசமான அருவருக்கத்தக்க மொழி பேசியதால் பாதிக்கப்பட்டவருக்கு தொல்லை ஏற்படுத்தியதாக இருக்க வேண்டும். அப்படி எதுவும் இந்த வழக்கில் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் எதிரிகளுக்கு எதிராக நிரூபணம் செய்யவில்லை என்பதை பரிசீலனை செய்து, **1) கே.ஜெயராம் மஞ்சு எதிர் ஜானகிராஜ் 1990 மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படியும், 2) பவன்குமார் எதிர் ஹரியானா (1996) 4 SCC 17 என்ற மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பில்**

> “ 294(b)பொருந்துவதற்கு மூன்று கடுமையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என தெளிவுபடுத்தியுள்ளனர். அவை பின்வருமாறு
>
> (i) அந்த செயல் ஒரு பொது இடத்திலோ அல்லது அதன் அருகிலோ செய்யப்பட வேண்டும். அதாவது ஆபாசமான வார்த்தைகள் உச்சரிக்கப்பட வேண்டும்.
>
> (ii) அந்த வார்த்தைகளோ அல்லது செயலோ உண்மையில் ஆபாசமானதாக இருக்க வேண்டும்.
>
> (iii) அந்த ஆபாச வார்த்தை கேட்டதால் மற்றவர்களுக்கு தொந்தரவு ஏற்பட்டிருக்க வேண்டும்.

என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியத்தின் மூலம் 1 முதல் 3 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 294(b) –ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் மேற்படி 294(b) உட்கூறுகளையும், மாண்மை உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம் முன்தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளதையும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, 1 முதல் 3 எதிரிகளை இ.த.ச. பிரிவு 294(b) குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10. இந்த வழக்கில், 1, 3 எதிரிகள் மீது இரண்டாவது குற்றச்சாட்டு என்பது 1–வது எதிரி கட்டையால் மாறி மாறி சாட்சி–2 சுப்பிரமணியனை தாக்கியதில் வலது பக்க

கன்னத்திலும், இடது கை மணிக்கட்டிலும், வலதுகால் முட்டிலும் சாதாரண காயம் ஏற்படுத்தியும், 3-வது எதிரி கட்டையால் சாட்சி-3 ஐ தாக்கியதில் அவருக்கு வலதுபக்க தோள்பட்டையில் சாதாரண காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக 1, 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 323-ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தார்களா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

10.1. மேற்படி இரண்டாவது குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 319, 321, 323 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:-

10.2 **<u>இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 319-</u>** காயம் - ஒருவருக்கு உடல்வலி, நோய் அல்லது பலவீனம் விளைவிக்கிற எவரும் காயம் விளைவிக்கிறார் என்று சொல்லப்படுகிறார்.

10.3 **<u>இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 321</u>**- தம்மிச்சையாகக் காயம் விளைவித்தல் - செய்கை ஒன்றின் மூலம் காயம் விளைவிப்பவர் காயம் விளைவிப்பதாகச் சொல்லப்படுவார்.

10.4 **<u>இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 323</u>** - காயம் விளைவிப்பதற்கான தண்டனை இந்தப் பிரிவின் கீழ் காயம் விளைவிக்கும் ஒருவர் ஓர் ஆண்டு சிறைத்தண்டனையோ, அல்லது ஆயிரம் ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

10.5 இரண்டாவது குற்றச்சாட்டை பொறுத்து அ.சா.1 சாட்சி 161 வாக்குமூலத்தில் எதிரி 1-வது எதிரி கட்டையால் மாறி மாறி சாட்சி-2 சுப்பிரமணியனை தாக்கியதில் வலது பக்க கன்னத்திலும், இடது கை மணிக்கட்டிலும், வலதுகால் முட்டிலும் சாதாரண காயம் ஏற்படுத்தியும், 3-வது எதிரி கட்டையால் சாட்சி-3 ஐ தாக்கியதில் அவருக்கு வலதுபக்க தோள்பட்டை மற்றும் இடது கையில் வீக்க காயம் ஏற்பட்டது என கூறியுள்ளார். ஆனால், அதன் தொடர்ச்சியாக நீதிமன்ற முதல் விசாரணையில் "ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ.1 என்றும், புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் தனக்குத்

தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அதேபோன்று, சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், " ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 தனது அப்பா என்றும், எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதகாவும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். மேலும், சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், " ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 தனது கணவர் என்றும், எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதகாவும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்", சாட்சியம் அளித்துள்ளார்கள். அவர்களை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில் அ.சா.1 முதல் அ.சா.3–ன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தை இந்நீதிமன்றம் பிரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1 முதல் அ.சா.3–ன் சாட்சியம் நம்பும்படியும், சாட்சியத்திற்கு ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) என இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

10.6 அதேபோன்று, அரசு தரப்பு வழக்கின் 1–வது எதிரி கட்டையால் மாறி மாறி சாட்சி–2 சுப்பிரமணியனை தாக்கியதில் வலது பக்க கன்னத்திலும், இடது கை மணிக்கட்டிலும், வலதுகால் முட்டிலும் சாதாரண காயம் ஏற்படுத்தியும், 3–வது எதிரி கட்டையால் சாட்சி–3 ஐ தாக்கியதில் அவருக்கு வலதுபக்க தோள்பட்டையில் சாதாரண காயத்தை ஏற்படுத்தினார்கள் என்பதை மருத்துவர் அளித்த காயச்சான்றின் மூலம் தெரிய வருகிறது. இந்த வழக்கில் புலனாய்வு அதிகாரியால் எதிரி பயன்படுத்திய கட்டையை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்படவில்லை. அதன் தொடர்ச்சியாக அ.சா.2, அ.சா.3 ல் கட்டையை இந்நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்படவில்லை.

அதனால், மருத்துவர் சாட்சியம் மற்ற அரசு தரப்பு சாட்சிகளோடு ஒத்துரைக்கவில்லை (Colloboration).

10.7. எனவே, இந்த அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்கும் வகையில் உள்ளது. ஆதலால் 1–வது எதிரி கட்டையால் மாறி மாறி சாட்சி–2 சுப்பிரமணியனை தாக்கியதில் வலது பக்க கன்னத்திலும், இடது கை மணிக்கட்டிலும், வலதுகால் முட்டிலும் சாதாரண காயம் ஏற்படுத்தியும், 3–வது எதிரி கட்டையால் சாட்சி–3 ஐ தாக்கியதில் அவருக்கு வலதுபக்க தோள்பட்டையில் சாதாரண காயம் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பு மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 ன் சாட்சியத்தின் மூலம் 1, 3 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, 1, 3 எதிரிகளை இ.த.ச. பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் 1, 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11. இந்த வழக்கில், 2–வது எதிரி மீது மூன்றாவது குற்றச்சாட்டு என்பது 2–வது எதிரி அரிவாளால் தாக்கியபோது அதை தடுத்ததில் அவருக்கு இடது கை மணிக்கட்டில் சாதாரண காயத்தை குற்றத்திற்காக 2–வது எதிரி மீது இ.த.ச. பிரிவு 324–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

11.1 மேற்படி மூன்றாவது குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 319, 322, 324 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

11.2. **இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 319 –** காயம் – ஒருவருக்கு உடல்வலி, நோய் அல்லது பலவீனம் விளைவிக்கிற எவரும் காயம் விளைவிக்கிறார் என்று சொல்லப்படுகிறார்.

11.3. **இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 322– கொடுங்காயம் விளைவித்தல்** – ஒரு காயம் விளைவிப்பவரால், விளைவிக்கப்படும் காயம், கொடுங்காயமாக இருக்குமானாலும், அவர் கொடுங்காயம் விளைவிப்பதாகச் சொல்லப்படுவார்.

11.4 **இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 324.** அபாயகரமான ஆயுதங்கள் அல்லது பொருட்கள் மூலம் காயம் விளைவித்தல் – 334 ஆவது பிரிவில் வகை செய்யப்பட்ட

சந்தர்ப்பத்தின்படியல்லாது வேறுவகையில் தவிர, சுடுவதற்கு, குத்துவதற்கு, அல்லது வெட்டுவதற்கான கருவி எதன் மூலமேனும், அல்லது எந்தக் கருவியைத் தாக்கும் கருவியாகப் பயன்படுத்தினால் அநேகமாக மரணம் விளைவிக்கக்கூடுமோ அந்தக் கருவி எதன் மூலமேனும், அல்லது நெருப்பு அல்லது சுடுபொருள் எதன் மூலமேனும், நஞ்சு அல்லது அரிக்கும் தன்மையுள்ள பொருள் எதன் மூலமேனும், அல்லது வெடிக்கும் பொருள் எதன் மூலமேனும், அல்லது இரத்தத்தில் ஏற்றால் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கிற பொருள் எதன் மூலமேனும், அல்லது விலங்கு எதன் மூலமேனும், காயம் விளைவிக்கும் ஒருவர், மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையோ, அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

11.5. மூன்றாவது குற்றச்சாட்டை பொறுத்து அ.சா.1 சாட்சி 161 வாக்குமூலத்தில் அருகில் கிடந்த சிறிய அருவாளை 2–வது எதிரி எடுத்து அ.சா.1–யை தாக்கியதில் அ.சா.1–ற்கு இடது கை மணிக்கட்டுக்கட்டில் சாதாரண காயம் ஏற்பட்டது என்று கூறியுள்ளார். ஆனால், அதன் தொடர்ச்சியாக நீதிமன்ற முதல் விசாரணையில் "ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ.1 என்றும், புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் தனக்குத் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அதேபோன்று, சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், " ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 தனது அப்பா என்றும், எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதகாவும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். மேலும், சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், " ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 தனது கணவர் என்றும், எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதகாவும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்", சாட்சியம் அளித்துள்ளார். அவர்களை

குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில் அ.சா.1 முதல் அ.சா.3–ன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தை இந்நீதிமன்றம் பிரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1 முதல் அ.சா.3–ன் சாட்சியம் நம்பும்படியும், சாட்சியத்திற்கு ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) என இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

11.6. அதேபோன்று, அரசு தரப்பு வழக்கின் படி 2–வது எதிரி அ.சா.1 ஐ அரிவாளால் தாக்கி சாதாரண காயம் என்பதை வழக்கின் புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக சாட்சி சொல்ல வந்த அ.சா.4 அவர்களின் சாட்சியத்தில் மேற்படி, அரிவாள், கட்டை ஆகியவற்றை அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டு, படிவம்–91 தயாரிக்கப்பட்டதாக சாட்சியம் ஏதும் கூறவில்லை. இவ்வழக்கில் அரிவாள், கட்டை சான்றுபொருளாக குறியீடு ஏதும் செய்யப்படவில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. இந்த அரசு தரப்பு வழக்கின்படி அ.சா.1 ஐ அரிவாளால் 2–வது எதிரி தாக்கி சாதாரண காயம் ஏற்படுத்தினார் என்பதை மருத்துவர் அளித்த காயச்சான்றின் மூலம் தெரிய வருகிறது. ஆனால், மருத்துவர் சாட்சியம் மற்ற அரசு தரப்பு சாட்சிகளோடு ஒத்துரைக்கவில்லை (Colloboration). எனவே, இந்த அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்கும் வகையில் உள்ளது.

11.7 ஆதலால் 2–வது எதிரி அ.சா.1 சங்கரன் என்பவரை அருகில் கிடந்த சிறிய அரிவாளால் அ.சா.1ன் இடது கை மணிக்கட்டில் வெட்டி சாதாரண காயம் ஏற்படுத்தினார் என்பதை அரசு தரப்பு மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 ன் சாட்சியத்தின் மூலம் 2–வது எதிரி மீதான இ.த.ச. பிரிவு 324–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, 2–வது எதிரியை இ.த.ச. பிரிவு 324 குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் 2–வது எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

12. இந்த வழக்கில் 1 முதல் 3 எதிரிகள் மீது மூன்றாவது குற்றச்சாட்டு என்பது எதிரிகள் மூன்று பேரும் சேர்ந்து புகார்தாரர் மற்றும் சாட்சி–2, சாட்சி–3 ஆகியோர்களைப் பார்த்து "எங்களை படிக்கட்டு மேல் ஏறி போகாதே என்று சொன்னால் உங்களை ஒரு வழி பண்ணாமல் விடமாட்டோம்" என்று கொலை மிரட்டல் குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 506(1)(3 எண்ணிக்கைகள்)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தார்களா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

12.1. மேற்படி மூன்றாவது குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 503, 506 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

12.2. **இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 503–மிரட்டல் குற்றம்(Criminal intimidation): உட்கூறுகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது** "ஒருவருடைய உடலுக்கு பெயருக்கு அல்லது சொத்துக்கு அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள ஒருவரின் உடலுக்கு அல்லது பெயருக்குக் கேடு இழைப்பதாக அவருக்குப் பீதி விளைவிக்கும் உட்கருத்துடன், அல்லது அத்தகைய மிரட்டல் நிறைவேற்றப்படுவதைத் தவிர்க்கும்பொருட்டு, அவர் சட்டபடி செய்யக் கட்டுப்பட்டிராத செய்கை எதனையும் செய்யாது விடுவதை, விளைவிக்க அச்சுறுத்துகிற ஒருவர் மிரட்டல் குற்றம் செய்தவராவார்.

**விளக்கம்:** அச்சுறுத்தப்பட்டவர் அக்கறை கொண்டுள்ள இறந்த ஒருவரின் பெயருக்குக்கேடு இழைப்பதான அச்சுறுத்தலும் இந்தப் பிரிவில் அடங்கும்".

12.3 **இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 506 :–மிரட்டலுக்குத் தண்டனை**

**பிரிவு 506(i) :–** மிரட்டல் குற்றம் செய்கிற ஒருவர் இரண்டாண்டுகள் வரை சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 506(ii) :** மிரட்டல் குற்றம் செய்கிற ஒருவர் ஏழாண்டுகள் வரை சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்..

12.4 நான்காவது குற்றச்சாட்டை பொறுத்து அ.சா.1 ஆகிய சாட்சி 161 வாக்குமூலத்தில். எதிரிகள் அனைவரும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களைப் பார்த்து "எங்களை படிக்கட்டு மேல் ஏறி போகாதே என்று சொன்னால் உங்களை ஒரு வழி பண்ணாமல் விடமாட்டோம்" என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என கூறியுள்ளார். அதன் தொடர்ச்சியாக நீதிமன்ற முதல் விசாரணையில், அ.சா.1 "ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ.1 என்றும், புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் தனக்குத் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அதேபோன்று, சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், " ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 தனது அப்பா என்றும், எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதகாவும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். மேலும், சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், " ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 தனது கணவர் என்றும், எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதகாவும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்", சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி முதல் விசாரணை சாட்சியமானது முன்பு சொன்ன 161 வாக்குமூலம், ஆகியவற்றில் 1 முதல் 3 எதிரிகள் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சொல்லிவிட்டு நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். **மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில்** அ.சா.1–ன் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1 முதல் அ.சா.3–ன் சாட்சியம் அரசு தரப்பை ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) எனவும், அ.சா.1

முதல் அ.சா.3 ஆகியோர்களை எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததால் அ.சா.1 முதல் அ.சா.3 க்கு உயிர் பயமோ, அச்சுறுத்தலோ எதுவும் ஏற்பட்டதாக அ.சா.1 முதல் அ.சா.3 இந்நீதிமன்றம் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேற்படி இ.த.ச. பிரிவு 506(1) (3 எண்ணிக்கைகள்) கீழ் எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனில் 1 முதல் 3 எதிரிகளின் செயலால் அ.சா.1 முதல் அ.சா.3–ற்கு உயிர் பயம், அச்சுறுத்தல் ஏற்பட்டு என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிருபணம் செய்யவேண்டும். ஆனால் இந்த வழக்கில் அரசு தரப்பு மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3–ன் சாட்சியத்தின் மூலம் 1 முதல் 3 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 506(1) (3 எண்ணிக்கைகள்)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, 1 முதல் 3 எதிரிகளை இ.த.ச. பிரிவு 506(1) (3 எண்ணிக்கைகள்) –ன் கீழான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. இந்த வழக்கில் 1, 2 எதிரிகள் மீது ஐந்தாவது குற்றச்சாட்டு என்பது 1, 2 எதிரிகள் 3–வது சாட்சி பழனியம்மாள் என்பவரை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி, அடித்து காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்து, அவரது பெண்மைக்கு பங்கம் விளைவித்த குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் மீது பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

13.1 மேற்படி ஐந்தாவது குற்றச்சாட்டை **பிரிவு 4 பெண்களுக்குத் தொல்லை கொடுத்தலுக்கான தண்டனையின் உட்கூறுகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது**

கல்வி நிலைய வளாகம், கோயில் அல்லது பிற வழிப்பாட்டுத்தலம், பேருந்து நிறுத்தம், சாலை, இரயில் நிலையம், திரையரங்கம், பூங்கா, கடற்கரை, திருவிழா நடைபெறும் இடம், பொதுமக்கள் பயன்படுத்தும் வாகனம் அல்லது கலம் அல்லது வேறு இடம் எதிலும் பெண்களுக்குத் தொல்லை கொடுக்கிற, தொல்லை கொடுப்பவருக்கு உடந்தையாக இருக்கின்ற எவரொருவரும் (முதல் குற்றச்சாட்டின் பேரில், ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனையும், ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத அபராதமும் விதிக்கப்பட வேண்டும். மேலும், இரண்டாவது அல்லது

அடுத்தடுத்த குற்றச்சாட்டின் பேரில் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத ஆனால் பத்து ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனையும் பத்து இலட்சம் ரூபாய்க்குக்குறையாகத அபராதமும் விதிக்கப்பட வேண்டும்)

**<u>பிரிவு 2(அ) சொற்பொருள் விளக்கங்கள் :</u>**

**<u>அ) "தொந்தரவு"</u>** என்பதன் பொருள், ஆண் ஒருவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அநாகரிகமான நடத்தை, செயல் அல்லது செயல்முறை (உடல், வாய்மொழி, வாய்மொழியல்லாத, டிஜிட்டல், மின்னணு அல்லது வேறு எந்த வழியிலானதாக இருந்தாலும்) அது அச்சுறுத்தல், பயம், அவமானம் அல்லது சங்கடத்தை ஏற்படுத்தினால் அல்லது ஏற்படுத்தக்கூடியதாக இருந்தால் ; அதில் மிரட்டல், அவதூறு, காயப்படுத்துதல், இடையூறு செய்தல், தாக்குதல் அல்லது பலவந்தம் பயன்படுத்துதல் ஆகியவையும் அடங்கும்)

13.2. ஐந்தாவது குற்றச்சாட்டை பொறுத்து அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் 161 வாக்குமூலத்தில். 1, 3 எதிரிகள் அ.சா.3-யை பார்த்து "தேவிடியா மக்களா" என்று பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி, "எங்களை படிக்கட்டு மேல ஏறி போகாதே என்று சொன்னால் உங்களை ஒரு வழி பண்ணாமல் விடமாட்டோம்" என்றும் கூறியுள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக நீதிமன்ற முதல் விசாரணையில், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டோம் என சாட்சியமளித்து அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். மேற்படி முதல் விசாரணை சாட்சியமானது முன்பு சொன்ன 161 வாக்குமூலம், ஆகியவற்றில் 1, 2 எதிரிகள் அ.சா.3ன் பெண்மைக்கு பங்கம் விளைவித்ததாக நேரடியாக அ.சா.1 மற்றும் அ.சா.2 தான் பார்த்ததாக குறிப்பிட்டு சொல்லிவிட்டு நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில் தான் நேரடியாக சம்பவத்தை பார்க்காதது போன்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். **மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில்** அ.சா.1 முதல் அ.சா.3-ன் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பிரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1 முதல் அ.சா.3-ன் சாட்சியம் அரசு தரப்பை ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration)

எனவும், 1, 2 எதிரிகள் அ.சா.3–ன் பெண்மைக்கு பங்கம் விளைவித்ததாக அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் இந்நீதிமன்றம் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேற்படி பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் 1, 2 எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனில் 1, 2 எதிரிகளின் நடத்தை, செயல் ஆகியவற்றால் அ.சா.3–ன் பெண்மைக்கு பங்கம் விளைவித்தல் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் சந்தேகித்திற்கு அப்பால் நிருபனம் செய்யவேண்டும். ஆனால் இந்த வழக்கில் அரசு தரப்பு மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியத்தின் மூலம் 1, 2 எதிரிகள் மீதான பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, 1, 2 எதிரிகளை பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் 1, 2 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. மேலும், அ.சா.4 ஆன காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில், இறுதியறிக்கையில் சொல்லப்பட்டுள்ள அரசு வழக்கிற்கு ஆதரமாக வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 ன் சாட்சியத்தின் மூலம், இவ்வழக்கின் புகார் மனு சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை குறித்தும், விசாரணை அதிகாரிகள் சம்பவ இடம் சென்று தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் குறித்தும் மட்டுமே தெரிய வருகிறது. இந்நிலையில் இவ்வழக்கில் புகார் மனு கொடுத்ததாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.1, சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை நேரடியாக கண்ணுற்றதாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையில், வழக்கு கோப்புகளை மட்டுமே பார்வையிட்டு அதனடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.4–ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, 1 முதல் 3 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்க இயலாது என்றும் இந்நீதிமன்றம் கருதி 1–வது எதிரியை இ.த.ச. பிரிவுகள் 294(b) (3

எண்ணிக்கைகள்), 323, 506(1) (3 எண்ணிக்கைகள்) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2–வது எதிரியை இ.த.ச. பிரிவுகள் 294(b) (3 எண்ணிக்கைகள்), 324, 506(1) (3 எண்ணிக்கைகள்) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 3–வது எதிரியை இ.த.ச. பிரிவுகள் 294(b) (3 எண்ணிக்கைகள்), 323, 506(1) (3 எண்ணிக்கைகள்) –ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

15) **1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் எனில், எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?**

15.1 மேற்படி அரசு தரப்பில் 1–வது எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b) (3 எண்ணிக்கைகள்), 323, 506(1) (3 எண்ணிக்கைகள்) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2–வது எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b) (3 எண்ணிக்கைகள்), 324, 506(1) (3 எண்ணிக்கைகள்) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 3–வது எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b) (3 எண்ணிக்கைகள்), 323, 506(1) (3 எண்ணிக்கைகள்)–ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிருபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு எந்தவித தண்டனையும் வழங்க இயலாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

16. இறுதியாக, 1–வது எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b) (3 எண்ணிக்கைகள்), 323, 506(1) (3 எண்ணிக்கைகள்) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2–வது எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b) (3 எண்ணிக்கைகள்), 324, 506(1) (3 எண்ணிக்கைகள்) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 3–வது எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b) (3 எண்ணிக்கைகள்), 323, 506(1) (3 எண்ணிக்கைகள்) –ன் கீழான குற்றச்சாட்டுக்கள் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 1 முதல் 3 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 1 முதல் 3 எதிரிகள் ஏற்கனேவே

இவ்வழக்கு சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் வழங்கியிருந்த பிணை முறிவு பத்திரத்தை மேல்முறையீடு காலம் முடிந்த பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

17. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாததால் அது குறித்து உத்தரவு ஏதுமில்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026–ம் ஆண்டு ஜுன் செவ்வாய்க்கிழமை, 16–ம் நாளான இன்று என்னால் இந்தத் தீர்ப்புரை அவையறிப்பகரப்பட்டது.

(ஒம்/–எம்.மாரி)
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.

<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>

1. அ.சா.1 திருமதி.சங்கரன் ( நிகழ்நிலை புகார்தாரர்)
2. அ.சா.2 திரு. சுப்பிரமணியன் (சம்பவத்தை நேரில் கண்ணுற்றவர்)
3. அ.சா.3 திருமதி. பழனியம்மாள் (சம்பவத்தை நேரில் கண்ணுற்றவர்)
4. அ.சா.4 திரு. வினித், (இரண்டாம் நிலைக்காவலர், சங்கரன்கோவில் டவுண் காவல் நிலையம்)

<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 04.09.2020 | புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 04.09.2020 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 04.09.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 04.09.2020 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 04.09.2020 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 03.09.2020 | அ.சா.1 ன் காயச்சான்று |
| அ.சா.ஆ.7 | 03.09.2020 | அ.சா.2 ன் காயச்சான்று |
| அ.சா.ஆ.8 | 03.09.2020 | அ.சா.3 ன் காயச்சான்று |

<u>அரசு தரப்பு சான்று பொருட்கள் :</u> இல்லை

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை.

(ஒம்/–எம்.மாரி)
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.